## தலைப்பு 221 – தொழிற் திணைக்களம்

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

தொழிற் திணைக்களத்தின் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்றுடன் கூடிய 2018 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்துடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் அதிகாரச்சட்டத்தின் 11(1) பிரிவின் பிரகாரம் தொழிற் திணைக்களத்தின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் உள்ளடங்கிய பொழிப்பறிக்கை 2019 யூன் 11 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(2) பிரிவின் பிரகாரம் தொழிற் திணைக்களத்திற்குரிய வருடாந்த விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2019 மே 31 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படுகின்றது.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களுக்கான தாக்கத்தைத் தவிர்த்து, நிதிக்கூற்றுக்கள் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான தொழிற் திணைக்களத்தின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று என்பன பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க உண்மையானதும் நியாயமானதுமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்புக்கள்

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு அமைவாகவும், 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38 பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல், மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) பிரிவின் பிரகாரம் திணைக்களத்தால் வருடாந்த மற்றும் உரிய நேரத்தில் நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்க கூடிய வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் புத்தகங்கள் மற்றும் அறிக்கைகளை பேணிச் செல்லப்படல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் திணைக்களத்தின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை தயாரித்து பேணிச் செல்லுவதனை கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்த வேண்டியிருந்ததுடன் அம்முறைமையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று செய்யப்பட்டு அதன் பிரகாரம் முறைமையை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் செய்யப்படல் வேண்டும்.

### 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நிமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால்

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதாக மதிப்பீடு செய்தல்.

- ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பிக்கும் போதும் நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாகவும்

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

## 1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(ஈ) பிரிவின் பிரகாரம் பின்வரும் விடயங்களை நான் தெரிவித்துக்கொள்கின்றேன்.

(அ) தொழிற் திணைக்களம் முன்னைய ஆண்டிற்கு நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கும் தேவைப்பாடு இல்லாதிருந்தமையால் மீளாய்வாண்டின் நிதிக்கூற்றுக்களை முன்னைய ஆண்டின் நிதிக்கூற்றுக்களுடன் இணங்குவதாக கூறுவதற்கு முடியாதுள்ளது. அதன் காரணத்தினால் முன்னைய ஆண்டிற்குரிய நிதிக்கூற்றுக்கள் தொடர்பான பரிந்துரைகள் இவ்வறிக்கையில் சமர்ப்பிக்கப்படவில்லை.

## 1.6 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 1.6.1 நிதிச் செயலாற்றல் கூற்று

பின்வரும் அவதானிப்புக்கள் செய்யப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) நடப்பாண்டில் வருமானத்திலிருந்து மீள் செலுத்துதல்கள் ரூபா 2,982,850 வருமானம் பெறுவனவுகளிலிருந்து கழித்துக் காட்டப்பட வேண்டிய போதிலும், அதை தொங்கல் கணக்கு மூலம் சீராக்கல் செய்யப்பட்டிருந்தது. | 2018 நவம்பர் 21 ஆந் திகதி 267/2018 ஆம் இலக்க அரச கணக்கிற்கான சுற்றறிக்கையில் காட்டப்பட்டுள்ள நிலை ஆலோசனை மற்றும் வழிகாட்டல்களுக்கு அமைய நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட வேண்டியமை. | சிறு தவறு காரணமாக இப்பிழை ஏற்பட்டிருக்கிறது. எதிர்வரும் காலங்களில் இவ்வாறான தவறுகள் ஏற்படாதிருக்க உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |
| (ஆ) முற்பணக் கணக்கில் காசு மூலம் மற்றும் குறுக்கீட்டு குறிப்பு மூலம் செலுத்தப்பட்டுள்ள வரவுகளின் தொகையான ரூபா 110,617,011 பெறுவனவுகளாக கவனத்தில் செலுத்தப்பட்ட வரவுகளின் தொகையான ரூபா 76,858,830 மாத்திரம் முற்பணக் கணக்குகளில் பெறுவனவுகளாக உட்படுத்தப்பட்டிருந்தன. இதனால் முற்பண பெறுவனவுகளில் ரூபா 33,758,181 குறைவாக நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தன. | - மேற்படி - | நிதிக்கூற்றுக்களில் ஏசீஏ-எ.ஃ.ப் படிவத்தில் முற்பண கணக்கின் எண்ணிக்கை ஏசிஏ-5 இல் சமர்ப்பித்துள்ள எண்ணிக்கைக்கு சமப்பட வேண்டும். அதன்படி காசு மற்றும் குறுக்கீட்டு குறிப்பு மூலம் முற்பணக் கணக்கிற்கான பெறுவனவுகள் ரூபா 104,504,886 ஆன போதிலும் தவறுதலாக குறுக்கீட்டு குறிப்புக்களின் பெறுமானம் நிதி செயலாற்றல் கூற்றில் உட்படுத்த இயலாது போயிற்று. |

| | | | |
|---|---|---|---|
| (இ) | மாதாந்த கணக்கு பொழிப்பாக்களின் படி ஏனைய பெறுவனவுகளின் தொகை ரூபா 703,095,430 ஆயினும், திணைக்களத்தினால் குறுக்கீட்டு குறிப்புக்களிலிருந்து பெற்ற பெறுவனவுகளை கவனத்தில் கொள்ளாமையினால் ரூபா 544,272,356 மாத்திரம் வருமானம் அல்லாத பெறுவனவுகளாக காட்டப்பட்டிருந்தன. அதன்படி ஏனைய பெறுவனவுகளின் பெறுமானம் ரூபா 158,823,074 குறைவாக நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தன. | - மேற்படி - | குறுக்கீட்டுக் குறிப்புக்களில் பெறுமானம் நிதிச் செயலாற்றல் கூற்றில் உட்படுத்த முடியாது போனதினால் இத்தவறு நேர்ந்துள்ளது. எதிர்வருடங்களில் இது போன்ற தவறுகள் ஏற்படாதிருக்க தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |
| (ஈ) | ஏனைய செலவின தலைப்புக்காக நடப்பாண்டில் ரூபா 5,409,982 செலவிடப்பட்டிருந்ததாக மாதாந்த பொழிப்பு பரிசோதனையின் போது வெளிப்பட்டிருந்தது. ஆயினும், தொங்கல் கணக்கில் அந்த அளவு ரூபா 149.550 காசாக காட்டப்பட்டிருந்தமையால் ரூபா 5,260,432 குறைவாக காட்டப்பட்டிருந்தது. | சுற்றறிக்கையின் படி குறுக்கீட்டு குறிப்புக்கள் மூலம் செய்யப்பட்ட கொடுக்கல் வாங்கல் நிதிக்கூற்று தயாரிக்கும் போது சேர்த்துக் கொள்ளப்பட வேண்டியமை. | 253 தலைப்புக்காக காசாக செலவிடப்பட்ட ரூபா 149,550 மாத்திரம் தொங்கல் கணக்கில் உட்படுத்தப்பட்டது. |
| (உ) | முற்பண கொடுப்பனவுகளாக காசு மற்றும் குறுக்கீட்டு குறிப்புக்கள் மூலம் வருடத்தினுள் பற்றுக்கள் ரூபா 107,715,724 ஆயினும், காசாக கொடுக்கப்பட்ட ரூபா 68,328,042 மாத்திரம் முற்பண செலவினமாக நிதிச் செயலாற்றல் கூற்றில் காட்டப்பட்டிருந்தது. | - மேற்படி - | நிதிக்கூற்றுக்களில் ஏசிஏ-எப் படிவத்தில் முற்பண கணக்கின் எண்ணிக்கை ஏசீஏ-5 இல் சமர்ப்பித்துள்ள எண்ணிக்கைக்கு சமமாக இருக்க வேண்டியுள்ளது. அதன்படி காசு மற்றும் குறுக்கீட்டு குறிப்புக்களின் மூலம் முற்பண கணக்கிற்கான கொடுப்பனவு ரூபா 101,603,200 ஆயினும் தவறுதலாக குறுக்கீட்டு குறிப்புக்களின் பெறுமானம் நிதிச் செயலாற்றல் கூற்றில் உட்படுத்த இயலாது போயிற்று. |

| | | | |
|---|---|---|---|
| (ஊ) | மாதாந்த கணக்கு பொழிப்பாக்கல் மற்றும் திறைசேரி அச்சுக் குறிப்பு இடையிலான முற்பண பெறுமான மிகுதியின் வேறுபாடுகள் ரூபா 9,348,085 மற்றும் முற்பணக் கொடுப்பனவுகள் (பற்று) மிகுதியின் வேறுபாடு ரூபா 3,869,478 தொங்கல் மூலம் சீராக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | - மேற்படி - | தவறுதலாக இப்பிழை நேர்ந்துள்ளது. எதிர்வரும் வருடங்களில் இதுபோன்ற தவறுகள் ஏற்படாதிருக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |

**1.6.2 காசுப் பாய்ச்சல் கூற்று**

----------------------------------------

பின்வரும் அவதானிப்புக்கள் செய்யப்படுகின்றன.

| | **கணக்காய்வு அவதானிப்புக்கள்** | **பரிந்துரை** | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை** |
|---|---|---|---|
| (அ) | காசு பாய்ச்சல் கூற்றில் நடவடிக்கை செயற்பாடுகளின் கீழான ஏனைய அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களினால் மற்றும் அவைகளுக்காக செய்யப்பட்ட, சீராக்கப்பட்ட, செலவின மிகுதி ரூபா 1,620,278,717 ஆகும். ஆயினும், ரூபா 1,479,798,721 மாத்திரம் உட்படுத்தப்பட்டிருந்த மையினால் நடவடிக்கை செயற்பாடுகளின் கீழ் பணச் செலவு ரூபா 140,479,996 குறைவாக காட்டப்பட்டிருந்தது. | தனிநபர் சம்பளங்கள் மற்றும் நடவடிக்கை செலவினங்கள் கணக்கிடுகையில் சுற்றறிக்கை ஆலோசனைப்படி சம்பந்தப்பட்ட குறுக்கீட்டு குறிப்புக்களையும் கவனத்திற் கொள்ளல் வேண்டும். | சில குறுக்கீட்டு குறிப்புக்களை சரியாக இனங்காண முடியாது போன காரணத்தினால் இத்தவறு நேர்ந்துள்ள படியால் முன்னால் இது போன்ற தவறுகள் ஏற்படாத படி நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |
| (ஆ) | காசு பாய்ச்சல் கூற்றில் முதலீட்டு செயற்பாடுகளின் கீழ் பௌதீக சொத்துக்களை அதிகரித்துக் கொள்வதற்கு ஏனைய அமைச்சுக்கள் திணைக்களத்தினால் மற்றும் அவைகளுக்காக செய்யப்பட்ட செலவு தொங்கல் செய்யப்பட்ட செலவு ரூபா 1,819,381,077 உட்படுத்தப்பட வேண்டும். ஆயினும், முதலீட்டு செயற்பாட்டின் கீழான காசு | சுற்றறிக்கையின் படி குறுக்கீட்டு குறிப்புக்களின் மூலம் செய்யப்பட்ட கொடுக்கல் வாங்கல் நிதிக்கூற்று தயாரிக்கும் போது சம்பந்தப்படுத்திக் கொள்ளப்பட வேண்டியமை. | சில குறுக்கீட்டு குறிப்புக்கள் சரியாக இனங்காண முடியாமையினா் இத்தவறு நேர்ந்துள்ளதுடன் முன்னால் இவ்வாறான தவறுகள் நேராத வண்ணம் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |

பாய்ச்சலாக ரூபா 1,813,415,443 மாத்திரம் காட்டப்பட்டிருந்தது.

### 1.6.3 சொத்துக்களுக்கான செலவினமும் உபகரணங்களும்

பின்வரும் அவதானிப்பு மேற்கொள்ளப்படுகின்றது.

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| பணி இல்லக் கட்டிடத்தை ஒழுங்குபடுத்தலுக்காக மீளாய்வாண்டில் ரூபா 1,524,443,966 செலவு செய்யப்பட்டிருந்தது. அதன்படி நடப்பாண்டு இறுதித்தினத்துக்கு ரூபா 8,291,590,160 ஆன கட்டிடத்தின் கிரயம் நிதிசாரா சொத்துக்களின் கீழ் காட்டப்பட்டிருந்தது. | சொத்துக்கள் சரியாக அறிக்கையிட மற்றும் அது சம்பந்தப்பட்ட ஆவணங்கள் முறையாக பேண வேண்டியமை. | ஆரம்ப மிகுதிகள் 2018 ஆகஸ்ட் 31 ஆந் திகதி கணனியிடப்பட்டதனால் CIGAS வேலைத்திட்டத்தில் அது 2018 ஆம் வருடத்திற்கான ஆரம்ப மிகுதியாக தெரிபடுகிறது. வவுச்சர் மூலம் செலுத்தப்பட்ட CIGAS வேலைத்திட்டப்படி சரியாக இன்வென்ட்றி செய்யப்பட்டாலும் இப்பெறுமதிகள் மேலும் ஆரம்ப மிகுதிகளுடன் சேர்த்துக் காட்டியுள்ளமை குறித்து பிரச்சினையுள்ளதாக அரசாங்ககணக்கியல் திணைக்களத்திற்கு அறிவித்த போதிலும் தீர்வு கிடைக்கவில்லை. |

### 1.6.4 கணக்காய்வு உத்தியோகத்தரினால் செய்யப்பட வேண்டிய உறுதிப்படுத்தல்கள்

பின்வரும் அவதானிப்பு மேற்கொள்ளப்படுகின்றது.

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| திணைக்களத்தின் நிதிக் கட்டுப்பாட்டிற்கான ஆக்கபூர்வ உள்ளக கட்டுப்பாட்டு முறைமையொன்றை தயாரித்து பேணப்படுவதாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்தப்பட வேண்டியதுடன் அம்முறைமையின் ஆக்கபூர்வத் தன்மையைக் குறித்து காலத்திற்குக் காலம் மீளாய்வு செய்யப்பட்டு அதற்கமைவாக முறைமையினை பயனுள்ளதாக பேணப்படுவதற்கான மாற்றங்கள் செய்யப்பட வேண்டியதுடன் அம்மீளாய்வுகளை எழுத்து மூலம் செய்யப்பட்டு அதன் பிரதியொன்று | 2018 19 ஆம் இலக்க தேசிய மீளாய்வு அதிகார சட்டத்தின் 38 ஆம் பிரிவின் ஏற்பாட்டின் படி செயற்பட வேண்டியமை. | கருத்துத் தெரிவிக்கப்படவில்லை |

கணக்காய்வாளர் அதிபதிக்கு சமர்ப்பிக்க வேண்டியிருந்த போதிலும், அவ்வாறான மீளாய்வு செய்யப்பட்டதற்கான கூறு கணக்காய்வுக்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

### 1.6.9 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை

மாதிரிகளுக்கான கணக்காய்வு ஆராய்வுகளின் போது அவதானிக்கப்பட்ட சட்டதிட்ட மற்றும் பிரமாணங்களின் ஏற்பாடுகளுக்கு இணங்காத சந்தர்ப்பங்கள் ஒப்பிட்டுக் காட்டப்பட்டுள்ளன.

**அவதானிப்புக்கள்**

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) 1942 இன் 45 ஆம் இலக்க தொழிற்சாலை அதிகார சட்டத்தின் 12(2) மற்றும் 13(2) பிரிவுகள் | தொழிற்சாலைகளுக்கான போதியளவு காற்றோட்டக் கோணம் மற்றும் தொழிற்சாலைகளுக்கான போதியளவினதும் பொருத்தமான ஒளி கோணங்கள் நியமங்கள் மூலம் அமைச்சரால் ஏற்படுத்திக் கொள்ளப்பட வேண்டியபோதிலும், கணக்காய்வு தினம் வரைக்கும் அவ்வாறான நியமங்கள் தயார் செய்திருக்கப்படவில்லை. | சட்ட அதிகார ஏற்பாடுகளுக் கமைவாக செயற்பட வேண்டியமை | 1942 இன் 45 ஆம் இலக்க தொழிற்சாலை சட்ட அதிகாரத்தின் 12(2) மற்றும் 13(2) பிரிவு, தொழிற்சாலை சட்ட அதிகாரத்தின் 13(2) பிரகாரம் தொழிற்சாலை (பொது ஒளி அங்கீகாரம்) பிரமாணம் 1965 க்கான பொருத்தமான ஒளி வழங்கும் மாணம் நியமிக்கப்பட்டுள்ளதுடன் அதை நாளதுவரை செய்வதற்காக தயாரிக்கப்பட்டுள்ள கோணங்கள் தற்போது தொழில் மற்றும் தொழிற்சங்க இணைப்பு அமைச்சின் கவனத்திற்கு அனுப்பப்பட்டுள்ளது. |
| (ஆ) தொழிற்சாலை திணைக்கள சுற்றறிக்கை | | | |
| (i) 2004 ஆகஸ்ட் 16 ஆந் திகதிய 10/2014 ஆம் இலக்க சுற்றறிக்கையின் (4) ஆம் பந்தி | 40 மாவட்ட தொழில் அலுவலகங்கள் சம்பந்தமாக தொழிலாளர் உத்தியோகத்தர்களினால் செய்யப்பட்ட 74,773 பரிசீலனை சம்பந்தப்பட்ட 55,142 அறிக்கைகள் சுற்றறிக்கை பிரமாணங்களுக்கு முரணாக 7 நாட்களுக்கும் மேலாக தாமதப்படுத்தப்பட்டு சமர்ப்பிக்கப்பட்டிருந்தன. | பரிசீலனை அலுவல்கள் முடிக்கப்பட்டு சம்பந்தப்பட்ட அறிக்கைகள் உரிய காலகட்டத்தினுள் சமர்ப்பிக்க வேண்டியமை. | தாமதப்படுத்தல்களை குறைத்துக் கொள்வதற்காக பிராந்திய மட்டத்தில் நடைபெறும் முன்னேற்ற மீளாய்வு கூட்டங்களில் கவனம் செலுத்தப்பட்டு முறையான நடவடிக்கை செயல்படுத்தப்படும். |

| | | | | |
|---|---|---|---|---|
| (ii) | 2011 ஏப்ரல் 29 ஆந் திகதிய 06/2011 ஆம் இலக்க சுற்றறிக்கை | வருடத்தினுள் கிடைக்கப் பெற்றிருந்த 24,972 முறை வீடுகளில் பரிசீலிக்கப்படாத முறை வீடுகளின் எண்ணிக்கை 10,064 அதாவது மொத்த முறையீடுகளில் நூற்றுக்கு 40 ஆகும். | மக்களினது குறைபாடுகள் மற்றும் முறைவீடுகள் தீர்க்கப் படுவதற்கான பயனுள்ளதாக மற்றும் வினைத்திறன் மிக்க முறையொன்றை திணைக்களம் கடைப்பிடிக்க வேண்டியமை. | பதில் சமர்ப்பிக்கப்படவில்லை. |

**2. நிதி மீளாய்வு**

**2.1 செலவின முகாமைத்துவம்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டின் மூலதன மற்றும் மூலதனமல்லாத செலவின விடயங்கள் 13 சம்பந்தமாக ஒதுக்கப்பட்ட முழு ஒதுக்கீட்டு பணத்தில் ரூபா 398,530,928 சேமிப்பில் இருந்தது. அந்த செலவின விடயத்தில் சேமிப்பின் வீதம் நூற்றுக்கு 12 முதல் நூற்றுக்கு 81 வரையிலான வீச்சளவில் இருந்தது. | நிதிப்பிரமாணம் 50 பிரகாரம் செலவின மதிப்பீடுகள் இயன்றளவு தர்க்க அடிப்படையிலும் சரியானதாகவும் தயாரிப்பதற்கு செயல்பட வேண்டியமை. | அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள சகல செலவின விடயங்களுக்கான சேமிப்புக்கான காரணிகளாக எதிர்பார்த்தபடி வாகன திருத்த வேலைகள் ஏற்படாமை முன்கூட்டி அறிவிக்கப்பட்ட பொருட்கள் உரிய தினத்தில் கிடைக்காமை, காரியங்களுக்கு அமைவான கேள்வியாள் இல்லாமை, போதியளவிலான கட்டுநிதி திறைசேரியிலிருந்து கிடைக்காமையினால் ஒதுக்கீடுகள் சேமிக்கப்பட்டமை நிர்மாணத்திற்காக சம்பந்தப்பட்ட காணியை சுவீகரிப்பதற்கு இயலாது போனமையும் காட்டப்பட்டிருந்தன. |
| (ஆ) | ஊழியர் சேமலாப நிதியத்தின் உறுப்பினர்களை மீள்பதிவு செய்தல் மற்றும் அவர்களுக்கான புது உறுப்பினர் எண் பெற்றுக் | - மேற்படி - | இவ்வலுவல் திணைக்கள பணிக் குழாமுக்கு ஒப்படைக்கப்பட்ட மேலதிக பணியாகையினால் முழு நேர கவனம் செலுத்த முடியாது போனமையினால் திட்டத்தின் |

| | | |
|---|---|---|
| கொடுப்பதற்கான திட்டத்திற்காக ரூபா 11,000,000 ஒதுக்கிக் கொள்ளப்பட்டிருந்தது. அத்திட்டத்தின் கீழ் நடப்பாண்டில் எவ்வித அலுவலும் செய்யப்படாததுடன் முழு ஒதுக்கீட்டுப் பணமும் வேறு செலவின விடயங்களுக்காக மாற்றிக் கொள்ளப்பட்டிருந்தன. | | பணிகளை நிறைவேற்ற முடியாமல் போயிற்று அதனால் அதற்காக ஒதுக்கப்பட்ட ரூபா 11,000,000 பணம் சேமிக்கப்பட்டிருந்தது. |
| (இ) 03 செலவின விடயம் சம்பந்தமாக ரூபா 12,670,580 க்கான சேமிப்பு குறித்து நிதிக்கூற்றுக்களில் காரணம் காட்டப்பட்டிருக்கவில்லை. | நிதிக்கூற்றுக்களில் பணம் சேமிப்புக் குறித்து காரணம் காட்டப்பட வேண்டும். | வரைவு அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள யாவும், 03 செலவின விடயங்களை சம்பந்தமான சேமிப்புக்கு காரணகளாக முன்கூட்டி அறிவிக்கப்பட்டவை, உரிய தினத்தில் கிடைக்காமை, திணைக்கள தேவைகளுக்கேற்ப வழங்குனர் இல்லாமை, மின்சாரம் சிக்கனமாக பாவனை செய்தல் ஆகியன காட்டப்பட்டிருந்தது. |

## 2.2 பொறுப்புக்கள் மற்றும் தொடர்புகளை ஏற்படுத்திக் கொள்ளல்

பின்வரும் அவதானிப்பு மேற்கொள்ளப்படுகின்றது.

| **கணக்காய்வு அவதானிப்புக்கள்** | **பரிந்துரை** | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை** |
|---|---|---|
| (அ) பணிப்பக கட்டிடத்தினை நிர்மாணிப்பதற்கான, 2017 திசெம்பர் 31 ஆந் திகதியாகும் போது சரி செய்யப்பட வேண்டிய தொகை ரூபா 377,147,334 ஆகும். 2018 ஆம் ஆண்டினுள் எவ்வித பணமும் ஒதுக்கப் பட்டிருக்காமையினால் சரி செய்யப்பட வேண்டியமை பொறுப்புக்களுக்காக காட்டப்பட்டிருக்கவில்லை. | தனியார் பிரிவு ஊழியர்களின் பங்களிப்பில் ஏற்படுத்தப்பட்டுள்ள ஊழியர் சேமலாப நிதியத்தின் பணம் கூடிய விரைவில் அந்நிதியத்தின் சரி செய்வதற்கான நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | 2017 ஆம் வருடம் இதற்கான ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்த போதிலும், போதியளவிலான கட்டுநிதி கிடைக்காமையினால் இச்செலுத்துதல்கள் செய்வதற்கு முடியாது போயிற்று. 2018 வருட மதிப்பீட்டிலிருந்து மற்றும் மேலதிக ஒதுக்கீட்டிலிருந்தாவது அதற்கான ஒதுக்கீடு திறைசேரியினால் பெற்றுத்தரப்படவில்லை. 2019 வருட மதிப்பீட்டினுள் இதற்கான ரூபா 377,148,000 ஒதுக்கீடு செய்யப்பட்டிருப்பதுடன் இப்போதைக்கு ரூபா 120 |

| | | |
|---|---|---|
| | | மில்லியன் இலங்கை மத்திய வங்கிக்கு மீள் நிரைவு செய்யப்பட்டுள்ளது. |
| (ஆ) நிதிக்கூற்றுக்களில் குறிப்பிடப்பட்டிருந்த பொறுப்புக்களுக்கான பெறுமதிளை மீறப்பட்டு 10 செலவின விடயங்கள் சம்பந்தமான ரூபா 1,219,200 ஆனது சென்ற ஆண்டிற்கான பொறுப்புக்கள் 2019 ஆம் வருடம் தீர்க்கப்பட்டிருந்தது. | உப அலுவலகங்களிலிருந்து இயன்ற அளவிலான தகவல்களைப் பெற்றுக் கொண்டு, பொறுப்புக்களை நிதிக்கூற்றுக்களில் சேர்த்துக் கொள்வதற்கு செயற்பட வேண்டியமை. | திணைக்களம் பன்முகப்படுத்தப் பட்டிருப்பதனால் அந்த சகல பிரிவுகளினதும் பொறுப்புக்களை இனங்கண்டு எங்களிடம் அறிக்கையிடப்பட்ட தகவல்கள் மாத்திரம் நிதிக்கூற்றுக்களில் உட்படுத்தப்பட்டன. ஆயினும், அந்த பிரிவுகளிலிருந்து அறிக்கையிடப்பட்ட பொறுப்புக்களுக்கு புறம்பாக செலுத்துதல்கள் செய்யப்படுவதற்காக வவுசர் சமர்ப்பிக்கப்பட்டதனால் வேறுபாடுகள் ஏற்பட்டன. |

### 2.3 வைப்புக்கான மிகுதிகள்

பின்வரும் அவதானிப்பு மேற்கொள்ளப்படுகின்றது.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) கொழும்பு மாவட்ட நீதிமன்றங்களில் ஊழியர்களுக்கு எதிராக தொடரப்பட்ட வழக்குகள் மூலம் அறவிடப்பட்ட ஆயினும், 2018 திசெம்பர் 31 ஆந் திகதிக்கு கொடுக்கப்படாது வைப்புக் கணக்கிலிருந்த மிகுதி ரூபா 301,469,360 ஆக இருந்தது. அதில் 03 வருடம் முதல் 08 வருடம் வரையிலான மிகுதி ரூபா 25,163,394 ஆக இருந்தது. மேலும், மாவட்டங்கள் மற்றும் உப தொழில் அலுவலகங்கள் மூலமான வழக்குகளிலிருந்து அறவிடப்பட்ட ரூபா 150,056,505 க்கான மிகுதிகளில் 2018 திசெம்பர் 31 ஆந் திகதிக்கு 05 வருடங்களுக்கும் மேலான வைப்புக்களின் | வழக்குகளின் மூலம் அறவிடப்பட்ட சேமலாபப் பணம், சன்மானம், சம்பளம் மற்றும் ஊனியர்களுக்கான கொடுப்பனவுகள் காலம் தோறும் அப்பணங்கள் கிடைக்க வேண்டிய பெறுநர்களுக்கு பெறுவனவுகள் உறுதிப்படுத்தும் படியான வினைத்திறன் மற்றும் பயனுள்ள நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியமை. | இதில் 2019/06/07 திகதியில் மிகுதி ரூபா 247,509,759 ஆனதுடன் அத்திகதிக்கு 3 முதல் 8 வருடங்களுக்கு இடையில் செலுத்தப்படாத மிகுதி ரூபா 21,863,372 ஆகும் ஊழியர் சேமலாப நிதிய வைப்பு முழுப் பணமும் சேரும் வரை கொடுப்பனவு செலுத்த முடியாமை, வைப்பிலிட்டோர் வெளிநாடு செல்லல், பணத்திற்கு சொந்தமானவர்களின் இறப்புக் காரணமாக உரித்தாளிகள் முன்வரும் வரை காத்திருத்தல் ஆகிய காரணங்களினால் பணம் செலுத்துவது தாமதமாகி உள்ளது. எப்படியாயினும், கால தாமதமாகியுள்ள பொது வைப்புக்கள் அரச வருமானத்தில் வரவு வைக்கப்பட்டதனால் |

| | | | |
|---|---|---|---|
| | மிகுதித்தொகை ரூபா 48,184,481 ஆகும். | | அப்பணத்தினை மீளப் பெறுவதில் ஏற்படும் தாமதம் காரணமாக பண உரிமையாளர் இக்கட்டுக்குள்ளாவதனால் கூடிய விரைவில் அவர்களை இனங்கண்டு பிரச்சினையை தீர்த்து வைக்குமாறு சம்பந்தப்பட்ட மாவட்ட காரியாலயங்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது. |
| (ஆ) | தனிப்பட்ட நிறுவனங்களினால் ஊழியர்களுக்கான நஷ்டஈடு செலுத்துவதற்காக தொழில் ஆணையாளர் நாயகத்தின் பெயரில் வைப்புச் செய்யப்பட்ட ஆயினும், 2018 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் செலுத்தப்படாது இருந்த நஷ்டஈட்டு பணத்தின் மிகுதி ரூபா 69,466,119 ஆகும். அதில் ஒரு வருடத்திற்கும் மேற்பட்ட காலமாக செலுத்தப்பட வேண்டிய நஷ்டஈட்டு மிகுதி ரூபா 53,284,103 ஆகும். | சம்பந்தப்பட்ட பெறுநருக்கு வினைத்திறனுடனும் உரிய காலத்திலும் கிடைப்பதற்கான முறையொன்று தயாரிக்கப்பட்டு செயல்படுத்த வேண்டியமை. | இந்த நிலுவைப் பணத்தில் 2019.06.07 திகதி வரை அறவிடப்பட வேண்டிய மிகுதி ரூபா 68,890,469 உம் அத்திகதிக்கு அறவிடப்பட வேண்டிய ஒரு வருடத்திற்கும் மேலான மிகுதி ரூபா 52,708,453 ஆகும். இதில் காபுல் லங்கா நிறுவன ஊழியர்களின் நஷ்டஈடு செலுத்துவதற்கான ரூபா 32,804,685 பணமும் உள்ளடங்குவதுடன் அப்பணம் நிறுவனத்தின் உள்ளக பிரச்சினை காரணமாக செலுத்தப்பட்டிருக்கவில்லை. எஞ்சியுள்ள பணமான ரூபா 36,085,784 மிகுதி ஏனைய எல்லா நிறுவனங்களுக்கும் உரித்தாகும். இந்த நஷ்ட ஈட்டு பணம் உரித்தான நில ஊழியர்களின் விலாசங்கள் வித்தியாசப்பட்டிருத்தல், றிக் விசிஷன் பத்திரங்களின் தகவல்கள் மற்றும் அவைகளுக்குரியவர்களால் சமர்ப்பிக்கப்படும் தகவல்கள் முரண்பாடாக இருத்தல் மற்றும் நஷ்டஈட்டுகுரியவர்கள் வெளிநாடு சென்றுள்ளமை ஆகிய காரணிகளினால் செலுத்துவதற்கு முடியாமற் போயுள்ளது. |
| (இ) | இலங்கை போக்குவரத்து சபையில் சேவையில் ஈடுபட்டிருந்த ஊழியர் சேமலாப சன்மானம் ஆகியவற்றை | ஊழியர் சேமலாப மற்றும் சன்மானப் பணம் சம்பந்தப்பட்ட பெறுநருக்கு | 2019.06.07 ஆகும் போது 5 வருடத்திற்கும் மேலான மிகுதி ரூபா 61,417,010 ஆகும். றிக்விஷன் பத்திரம் சமர்ப்பிக்காத நபர்களுக்கு |

| | | |
|---|---|---|
| செலுத்தப்படாமையினால் சபையினால் அறவிடப்பட்டு ஆயினும், செலுத்தப்படாத 2018 திசெம்பர் 31 ஆந் திகதிக்கு பொது வைப்புக் கணக்கில் தடுத்து வைக்கப்பட்டிருந்த மிகுதி ரூபா 66,762,658 ஆகும். இப்பணத்தில் ரூபா 62,021,189 அறவிடப்பட்டு 05 வருட காலத்திற்கு மேலாக கழிந்திருந்த போதிலும், 2018 ஆம் வருடத்தினுள் எவ்விதப் பணமும் ஊழியர்களுக்கு கொடுக்கப்பட்டிருக்க வில்லை. | வினைத்திறனுடனும் உரிய காலத்திலும் பெற்றுக் கொள்ளக் கூடிய முறைமை தயாரித்து செயல் படுத்த வேண்டியமை. | செலுத்தப்பட வேண்டிய மிகுதியை மென்மேலும் செலுத்தப்படாது மிகுதி தேங்கி இருந்ததுடன் அப்பணம் இலங்கை போக்குவரத்து சபைக்கு அனுப்புவதற்கு இயலுமானது சகல சன்மானப் பணம் உரித்தானவர்களுக்கு சம்பந்தப்பட்ட சன்மானம் செலுத்தப்பட்டு மிகுதி இருந்தால் மாத்திரமே ஆகும். தற்போதுள்ள பிரச்சினை தீர்க்கப்படும் வேளையில் அவர்களுக்கு சன்மானப் பணம் கொடுக்க வேண்டிய இருப்பதனால் இவ்வைப்பு இன்றும் தேக்கி வைப்பதற்கு நேர்ந்துள்ளது. |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 திட்டங்களை செயல்படுத்துவதில் தாமதம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) பதுள்ள மற்றும் இரத்தினபுரி மாவட்ட தொழிலாளர் அலுவலகங்கள் நிர்மாணிப்பதற்காக 2017 ஆம் வருடம் ரூபா 49,775,346 கட்டிட திணைக்களத்திற்கு விடுவிக்கப்பட்டிருந்த போதிலும், மீளாய்வாண்டு முடிவடையும் போது அதன் பெறுகை அலுவல் மாத்திரம் ஆரம்பிக்கப்பட்டிருந்தது. | திட்டப்படி திட்டங்களை ஆரம்பிப்பதற்கு செயல்பட வேண்டியமை. | பதில் சமர்ப்பிக்கப் பட்டிருக்கவில்லை. |
| (ஆ) மதிப்பீட்டுப் பெறுமானம் ரூபா 174,570,000 க்கான ஹட்டன் மாவட்ட தொழிலாளர் அலுவலகம் நிர்மாணிப்பதற்காக 2016, 2017 மற்றும் 2018 ஆகிய வருடங்களில் ரூபா 29,850,123 கட்டிட திணைக்களத்திற்கு விடுவிக்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டு இறுதியிலும் நிர்மாணிப் பணிகளின் முன்னேற்றம் நூற்றுக்கு 12 ஆக மாத்திரம் இருந்தது. | - மேற்படி - | பதில் சமர்ப்பிக்கப் பட்டிருக்கவில்லை. |

**3.2 சொத்துக்கள் முகாமைத்துவம்**

பின்வரும் அவதானிப்பு மேற்கொள்ளப்படுகின்றது.

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| தொழிலாளர் பரீட்சை முறைமைத் திட்டத்திற்காக (Labour Inspection System Application) ரூபா 699,713 க்கு கொள்வனவு செய்யப்பட்ட சர்வர் இயந்திரம் 2018 ஆகஸ்ட் 21 ஆந் திகதி கிடைக்கப் பெற்றவுடன் அது 04 மாதத்திற்கு அதிக காலம் பாவனை செய்யப்படாது இருந்தது. | வினைத்திறனுடன் செய்யப்படுவதற்கு செயல்பட வேண்டும். | LISA வேலைத் திட்டத்திற்காக கொள்வனவு செய்யப்பட்ட சர்வர் இயந்திரம் நிறுவப்பட்டதுடன் LISA முறைமைக்கு சம்பந்தமான மென்பொருட்களும் மேம்படுத்துவதற்காக அம்மென்பொருளை தயார் செய்தவர்களுடன் பேசப்பட்டுள்ளதுடன் முன்னால் சம்பந்தப்பட்ட அலுவல் செய்யப்பட உள்ளது. |

**4. நல்லாட்சி**

**4.1 மக்கள் சேவை நிறைவேற்றுதல்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) 181 வழக்குகள் சம்பந்தப்பட்ட வேலை கொள்வோரினால் நீதிமன்றத்தில் வைப்பு செய்யப்பட்டுள்ள ரூபா 93,092,779 குறித்த ஊழியர்களுக்கு செலுத்துவதற்காக தொழிற் காரியாலயத்தினால் தயாரித்துள்ள ‘‘சீ’’ அறிக்கைகளில் மற்றும் றிக்வேஷன் பத்திரங்களில் காணப்படும் குறைபாடுகளினால் கொடுப்பனவு செய்வதற்கு முடியாமல் போய் இருந்தது. | நீதிமனறங்கள் மூலம் அறவிடப்பட்ட பணம் கூடிய விரைவில் குறித்த பயன் பெறுநர்களுக்கு பெற்றுக் கொடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | ‘‘சீ’’ அறிக்கையில் நிலவும் குறைபாடுகள் காரணமாக ஊழியர் சேமலாப நிதியத்தை தனிப்பட்ட கணக்குகளில் இடுவதற்கு முடியாது உள்ளதுடன் அதிகளவிலான ‘‘சீ’’ அறிக்கைகள் இப்பிரிவுக்கு கிடைத்ததன் பின் மத்திய வங்கியின் கவனத்திற்கு அனுப்பிய பின் பல குறைபாடுகள் இருப்பதனால் திருப்பி அனுப்பப்பட்டவைகளானதுடன் குறித்த மாவட்ட அலுவலகங்களுக்கு அனுப்பி அவைகளின் குறைபாடுகளை திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. றிக்விஷன் குறைபாடுகளினால் கொடுப்பனவு செய்யப்படாத சந்தர்ப்பங்கள் அறிக்கையிடப்பட்டிருக்க வில்லை. |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | சரியான ‘‘சீ’’ அறிக்கையில் கிடைக்காமையினால் அங்கத்துவ கணக்கிற்கு வரவு வைக்கப்படாத பங்களிப்பு பணம் ரூபா 10 மில்லியனுக்கு அதிக பணம் பலபல நிறுவனங்களின் சந்தாப் பணம் தொழில் அலுவலகங்கள் ஊடாக துரிதமாக கணக்கிலிடப்படாது மத்திய வங்கி சந்தா கணக்கில் முடக்கப்பட்டிருந்தது. | - மேற்படி - | பத்து மில்லியனுக்கும் அதிக பணம் தொழில் ஆணையாளர் கணக்கில் முடக்கப்பட்டிருக்கும் 23 நிறுவனங்களுள் ஒரு சில நிறுவனங்களைத் தவிர்த்து ஏனையவைகளின் பணச் சிக்கல்களை தீர்ப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |
| (இ) | நீதிமன்றத் தீர்ப்புக்களின் படி பயன்பெறுநர்களின் கணக்குகளில் வரவு வைக்கப்பட வேண்டிய ஆயினும் ‘‘சீ’’ அறிக்கைகளின் குறைபாடுகள் காரணமாக மீளாய்வாண்டு இறுதியிலும் அவ்வாறு வரவு வைப்பதற்கு முடியாமல் மாவட்ட தொழில் அலுவலகங்களில் முடக்கப்பட்டிருந்த பணம் ரூபா 43,691,239 ஆகும். | - மேற்படி - | அதிகளவிலான நிறுவனங்கள் மூடப்பட்டுப் போய் இருப்பதனால் ‘‘சீ’’ அறிக்கை தயாரப்படுத்துவதில் நடைமுறை சிக்கல் ஏற்படுவது அதிகமாகும். இவ்வாறு ‘‘சீ’’ அறிக்கை தயார் செய்ய முடியாமற் போனதினால் பாரிய அளவிலான பணம் தொழில் ஆணையாளர் கணக்கில் இருப்பதுடன் தற்போது நடைமுறையில் உள்ள விகிதாசார கணக்கிலிடும் முறையினால் புதிதாக சேரும் வழங்குகளில் இவ்வாறான நிலை ஏற்படுவது நேரொத்தமாக குறைவான மட்டத்தில் உள்ளது. |
| (ஈ) | மாவட்ட, 40 தொழ்ல் அலுவலகங்கள் சம்பந்தமாக பரிசோதிக்க வேண்டிய 146,468 முழு நிறுவனங்களுள் மீளாய்வாண்டில் 75,086 நிறுவனங்கள் அதாவது நூற்றுக்கு 51 பரிசோதனைக்குட்படவில்லை | தொழிலாளர் பரிசோதனை காலத்திற்கு காலம் செய்யப்பட வேண்டியமை. | பதில் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. |
| (உ) | மீளாய்வாண்டின் தீர்ப்பு வழங்கப்பட்ட 4,207 நீதிமன்ற வழக்குகள் சம்பந்தமான ரூபா 425,532,833 பணம் அப்பெறுநர்களுக்கு வருடம் முடிவடைந்தும் கூட வழங்கப்படவில்லை. | நீதிமன்ற தீர்ப்பு மூலம் பெற்றுக் கொடுக்கப்படும் பயன் பெறுதல்கள் உடன் சம்பந்மப்பட்டவர் களுக்கு பெற்றுக் கொடுக்கப்பட வேண்டியமை | வழக்குகள் மூலம் அறவிடப்படும் சந்தாப் பணம், சம்பந்தப்பட்ட ‘‘சீ’’ அறிக்கையில் உள்ள குறைபாடுகளினால் இது போன்ற நிலை ஏற்பட வழிலிருப்பதுடன் இப்பணச் சிக்கலை தீர்ப்பதற்கு பலமுறைகள் கையாளப்படுகின்றன. |

| | | |
|---|---|---|
| (ஊ) 2018 திசெம்பர் 31 ஆந் திகதிக்கு செயழிலந்துள்ள வழக்குகளின் முழு எண்ணிக்கை 4,921 ஆக இருந்ததுடன் அவ்வழக்குகளால் அறவிடப்பட வேண்டிய பெறுமானம் ரூபா 1,547,622,904 ஆகும். அதில் 05 வருடங்கள் மேலாக வழக்குக் கோவை 3,186 இருந்ததுடன் அது முழு எண்ணிக்கையில் நூற்றுக்கு 65 ஆகும். மேலும் பிடிவிராந்து விடுக்கப்பட்ட வழக்குக் கோவை 2,994 ஆக இருந்ததுடன் அதன் பெறுமானம் ரூபா 933,751,835 ஆகும். அதில் 05 வருடங்களுக்கும் மேலாக வழக்குக் கோவை 2,047 இருந்ததுடன் அது மொத்த எண்ணிக்கையில் நூற்றுக்கு 68 ஆகும். | திணைக்களத்தின் தாமதத்தால் ஏற்படும் சட்டரீதியான தாமதங்களை குறைத்துக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | இவ்வழக்குகள் சம்பந்தமான நாட்டில் தொழில் அலுவலகங்களில் தற்போது செயழிலந்தும் பிடிவிராந்துடன் உள்ள வழக்குகளை செயல்படுத்தப்பட்டு ஊழியர்களுக்கு அறவிட்டுக் கொடுப்பனப்பட வேண்டிய சட்டரீதியான பணம் அறவிட்டுக் கொடுப்பதற்கான பலவித நடவடிக்கை சட்டபிரிவினால் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. |

## 5. மனிதவள முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2018 சனவரி 24 ஆந் திகதிய 02/2018 ஆம் இலக்க மற்றும் அரச நிர்வாக சுற்றறிக்கையின் பந்தி 2 மற்றும் பந்தி 3 அமைவாக மீளாய்வாண்டிற்கு அமைவாக மனிதவள அபிவிருத்தி திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்க வில்லை. | அரச நிர்வாக சுற்றறிக்கையின் பிரகாரம் மனிதவள அபிவிருதத்தி திட்டமொன்று வகுக்கப்பட வேண்டும். | 02/2018 ஆம் இலக்க மற்றும் 2018 சனவரி 24 ஆந் திகதிய அரச நிர்வாக சுற்றறிக்கையின் படி 2019 வருடத்திற்கான மனிதவள அபிவிருத்தி திட்டமொன்று வகுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. |